**// தேர்வுகள் //** **// தனி கவனம் //** **//மிக அவசரம் //**

**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண் 300/ ஆ4/2021 நாள் 13.02.2021**

**பொருள் :** தேர்வுகள் – வேலூர் மாவட்டம் – 2020–2021 ஆம் கல்வியாண்டிற்கான மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வு – பள்ளி மாணவர்களின் பெயர்ப்பட்டியலில் திருத்தங்கள் மேற்கொள்ள – இறுதி வாய்ப்பளித்தல் – சார்பு.

**பார்வை :** 1. இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடிதம் நாள் 25–01–2021
2. சென்னை–6 அரசுத் தேர்வுகள் இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண் 025650/எச்1 /2020 நாள் 13.02.2021

-----

பார்வை 1–ல் காணும் கடிதத்தில் 2020–2021–ஆம் கல்வியாண்டிற்கான மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வெழுதவுள்ள பள்ளி மாணவர்களின் பெயர்ப்பட்டியலில் உள்ள திருத்தங்கள் பள்ளிகளிலிருந்து பெற்று வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகம் மூலம் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டது.

தற்போது பார்வை 2ல் காணும் கடிதத்தின் படி இந்நிலையில் ஒரு சில பள்ளிகளில் பெயர்ப்பட்டியலில் திருத்தங்கள் / சேர்க்கை / நீக்கங்கள் மேற்கொள்ள மீள இறுதி வாய்ப்பு, சென்னை அரசுத் தேர்வுகள் இயக்குநரின் ஆணையின்படி வழங்கப்பட்டுள்ளது. இவ்வாய்ப்பினை பயன்படுத்தி மேல்நிலை இரண்டாமாண்டு பெயர்ப்பட்டியலில் திருத்தங்கள் / சேர்க்கை / நீக்கங்கள் இருப்பின் அதன் விவரங்களை 15.02.2021 முதல் 17.02.2021 வரையிலான நாட்களில் வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகத்தின் B4பிரிவு எழுத்தரிடம் நேரில் ஒப்படைக்க அனைத்து மேல்நிலைப் பள்ளி தலைமைஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேற்குறிப்பிட்டுள்ள தேதிக்கு பின் பெறப்படும் திருத்தங்கள் இணையதளத்தில் மேற்கொள்ள இயலாது என திட்டவட்டமாக தெரிவிக்கப்படுகிறது. காலம் தாழ்த்தி பெறப்படும் திருத்தங்களுக்கு சார்ந்த பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்களே முழுபொறுப்பாவார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூர்

பெறுநர்
அனைத்து மேல்நிலைப் பள்ளி தலைமைஆசிரியர்கள்
மெட்ரிக் பள்ளி முதல்வர்கள்

நகல்
வேலூர் மாவட்டக் கல்வி அலுவலருக்கு தகவலுக்காகவும் தொடர் நடவடிக்கை மேற்கொள்ள அனுப்பலாகிறது.